மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பழமொழி நானூறு உணர்த்தும் விழுமியங்கள்

## Values in Palamozhi Nanuru

ஏ. பால்பிரபு சாந்தராஜ் / Y. Paul Prabhu Santharaj[1]
[1]Associate Professor, Chennai Christian College
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச்சாரம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் பழமொழி நானூறில் காணக்கிடக்கும் விழிமியங்களை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் கொடை, இன்சொல், ஊரோடு ஒத்து வாழ்தல், புறங்கூறாமை, பெரியோரின் பெருமை ஆகிய தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வின் வழி, பழமொழி நானூறில் காணப்படும் விழுமியங்களைஅறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு பழமொழி நானூறு உணர்த்தும் விழுமியங்களை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** பழமொழி நானூறு, உணர்த்தும், விழுமியங்கள்

**Abstract**

The major objective of the research is to explore the values in the Palamozhi Nanuru text. This research is designed in a qualitative approach. The library work is used for this study. In this study, the topics of gifts, insolence, living in harmony with the village, unspoken ness and pride of elders have been investigated. This study is useful in teaching the younger generation about the values in the Palamozhi Nanuru text. The research claims to be the first such attempt to do a study regarding the values in the Palamozhi Nanuru text.

**Keywords:** Classical literature, Tamils, Tamil education

## முன்னுரை

உலகில் கோடிக்கணக்கான மனிதர்கள், ஆயிரக்கணக்கான மொழிகள், ஆயிரக்கணக்கான இனங்கள் இருந்தாலும்; இந்த மானுடம் பண்பாடுமிக்கதாய் பாதுகாக்கப்பட்டு வருவதற்குக் காரணம் தனிமனித விழுமியங்களும், சமுதாய விழுமியங்களும் இங்கு பேணப்படுவதால்தான்.

விழுமியங்கள்

விழுமியம் என்பது பொதுமக்கள் வாழ்ந்து அறிந்து அடுத்த தலைமுறைக்குக் கொடுத்துச் செல்லும் நெறிகள் குறித்த நம்பிக்கைகளாகும். விழுமியம் என்ற சொல்லுக்கான பொருளாக மதிப்பு எனப் பொதுவாகக் குறிப்பிடலாம். எனினும், மனிதனுடைய நம்பிக்கைகள், எண்ணங்கள், கருத்துகள் என்பவற்றின் உருவாக்கத்தில் அமைந்ததே விழுமியம். உலகம் முழுக்க அறநெறிகள், நீதிகள், ஆசாரங்கள் பல உள்ளன. அவை அனைத்தையும் ஒட்டு மொத்தமாகச் சுட்டக் கூடிய சொல்லே விழுமியம்.

தற்கால மனிதர்கள் வாழ்க்கையில் தேவைகளை அடைந்துவிட்டால் நிறைவு ஏற்பட்டுவிடும் என்று நினைக்கின்றனர். அதற்காக இரவுபகல் பாராது நீதி நியாயம் பாராது உழைக்கின்றனர். இலக்கை அடைவதே இன்றியமையாதது, அதை அடையும் வழிமுறைகள் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை என நம்புகின்றனர். ஆனால் மனித வாழ்வின் சிறப்புக்கும் உயர்வுக்கும் உறுதுணையாக மனிதனை மனிதனாக வாழ்விப்பவை மனிதர்களுக்குப் பெறுமதிப்பைத் தரக்கூடிய பண்புகள், குணவியல்புகள், நடத்தைகள், மனித விழுமியங்கள் எனலாம். மனித வாழ்க்கையை மேம்பாடடையச் செய்பவை மனித விழுமியங்கள். அவை மனித குலத்துக்கே உரிமையானவை. 'மரியாதை செய்தல், சுயக்கட்டுப்பாடு, தன்னம்பிக்கை, பொறுப்புக்கூறல், ஊக்கப்படுத்தல், இரக்கம், அன்பு, பொறுமை போன்ற பண்புகள் மனிதநேய விழுமியங்களாகும்'. விழுமியங்கள் மனித குலத்தின் மதிப்புமிக்க அரும்பெரும் சொத்து. அவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு காத்துவரும் பெட்டகங்களாக உள்ள சிலவற்றுள் முதன்மையானவை பழமொழிகளாகும்.

பழமொழி

பழமொழி என்ற சொல்லே இதன் பழமையை உணர்த்தும். பழமொழியின் தோற்றத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல இயாலாது. மனிதன் என்று பேசக் கற்றுக் கொண்டானோ அன்றே பழமொழிகள் புழங்கத் தொடங்கியிருக்கும். "பழமொழிகள் பொதுமக்கள் அனுபவத்தின் பதிவு. அனுபவம் என்பது கல்வியால் வருவதன்று அது காலத்தால் வருவது. தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் பழமொழி பற்றிப் பேசுவதிலிருந்தே பழமொழி இலக்கியத்தின் தொன்மை விளங்கும். பழமொழிகள் புலவர்களால் புனையப்படுபவையல்ல அவை மக்கள் மன்றத்தில் மலர்பவை. தொல்காப்பியம் பழமொழியின் இலக்கணத்தைப் இவ்வாறு பதிவு செய்துள்ளது. தொல்காப்பியத்தில் 'முதுமொழி' என்ற பெயரால் இது சுட்டப்பட்டுள்ளது. பழமொழி என்பது நுட்பம், சுருக்கம், கூரிய அறிவு, ஒழுங்கு, எளிமை, குறித்த பொருளை அழுத்தமாகச் சுட்டும் இறுக்கம் என்பவை அவற்றின் தன்மைகள் என்பது தொல்காப்பியர் கருத்து.

“நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றும்
குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்
ஏது நுதலிய முதுமொழி” (தொல்.பொரு.செய். 166)

அனுபவம் வாய்ந்த பெரியவர்களால் ஒவ்வொரு அனுபவத்தின் வாயிலாகவும் அடிக்கடி உபயோகப்படுத்தப்படும் சொல் வழக்குகள் பழமொழிகள் என்று பெயர் பெற்றன. பழமொழிகளால், தமிழ் மக்களின் சமூக வாழ்க்கை, அரசியல் நீதிகள், கல்வி, வணிகம் போன்றவற்றை அறிய முடிகின்றது. “ஒரு நாட்டின் உண்மையான வாழ்க்கை நெறியை, பண்பாட்டினை, நாகரிகத்தினை, பழக்கவழக்கங்களை, நம்பிக்கைகளை, சமுதாயச் சிக்கல்களை, சிறப்புகளை, அறிவின் பெருமையினை எனப் பலவற்றையும் அறுதியிடும் கருவிகளில் முன்னிற்பன பழமொழிகள்.”3 வாய்மொழி இலக்கியங்களாக இருக்கும் இவைகளைத் தமிழில் முதன்முதலில் பதிவு செய்திருக்கும் நூல் பழமொழி நானூறு.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகச் சேர்க்கப் பெற்றுள்ள பழமொழி நானூறு கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அறிஞர்களால் குறிப்பிடப் பெற்றுள்ளது. பாண்டியநாட்டில் முன்றுறை என்னும் பகுதியைச் சேர்ந்த அரச மரபினரால் இயற்றப் பெற்றது இந்நூல். நானூறு நானூறு செய்யுள்களாகத் தொகுத்தல் என்னது அக்காலத்தில் மரபாக இருந்தது. புறநானூறு, அகநானூறு, நற்றிணை நானூறு, குறுந்தொகை நானூறு என இம்மரபைப் பின்பற்றி நானூறு பழமொழிகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

அக்காலத்தில் மக்களிடையே பெறுமளவில் வழங்கி வந்ததாகக் கருதப்படும் பழமொழிகளில் நானூறு பழமொழிகளைத் தேர்ந்தெடுத்து முதலிரண்டு அடிகளில் தான் சொல்லக் கருதுகின்ற உண்மையை அமைத்தும் செய்யுளின் இறுதியில் அதற்கேற்றதும் அவ்வுண்மையை வலியுறுத்துவதுமான பழமொழியை அமைத்தும் செய்யுள்களை அமைத்துள்ளார் ஆசிரியர். இது 1874 ஆம் ஆண்டு சுப்புராயச் செட்டியாரால் முதன் முதலில் அச்சிட்டு வெளியிடப் பெற்றது. ஆனால் அதில் பத்துப் பாடல்கள் குறைவாகவேயிருந்தது. இக் குறையைப் போக்கும் வகையில் 1904 ஆம் ஆண்டில் ஆறுமுக நயினார் நானூறு பாடல்களையும் சேர்த்து அச்சிட்டு வெளிட்டார். இதற்குப் பின் தற்காலம் வரை பல்வேறு வகைகளில் பழமொழிகள் தொகுத்து வெளியிடப் பெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. எல்லா காலத்திற்கும் பழமொழிகளின் தேவை இருந்து கொண்டேயிருக்கிறது.

**ஆய்வு நெறி முறைகள்**

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## ஆய்வுத் தரவுகள் பகுப்பாய்வு

ஆய்வுத் தரவுகள் கொடை, இன்சொல், ஊரோடு ஒத்து வாழ்தல், புறங்கூறாமை, பெரியோரின் பெருமை ஆகிய தலைப்புகளில் பகுப்பாயப்பட்டுள்ளன.

பழமொழிகளில் விழுமியங்கள்

சங்க இலக்கியங்கள் தொல்காப்பியம் போன்ற மிகப் பழங்கால இலக்கிய இலக்கண நூல்களின் காலங்களுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பழமொழிகள் மக்களிடம் புழக்கத்திலிருந்தன. இவற்றை முதன்முதலாக பழமொழி நானூறு என்னும் நூல் பதிந்து வைத்துள்ளது. இதில் உள்ள நானூறு செய்யுள்களிலும் கொடை, இன்சொல், நட்பு, ஒழுக்கம், பெரியோரின் பெருமை, மனவலிமை, தந்தையின் கடமை, முயற்சியின் உயர்வு, அறிவின் பெருமை, புலனடக்கம், போலித்தவம், பகைகளைதல் என இன்னும் பல்வேறு பொருண்மைகள் குறித்த பழமொழிகள் தொகுக்கப்பெற்றுள்ளன. கட்டுரையின் விரிவஞ்சி சில மட்டுமே இங்கு விளக்கப் பெற்றுள்ளன.

### கொடை

கடந்த கால மானுட வாழ்வியலை நோக்கும்போது இல்லை என்று நின்றவருக்கு இல்லை எனாது கொடுக்கும் கொடைத்தன்மை பெரிதும் போற்றப் பெற்றுள்ளது. சங்க இலக்கியம் தொடங்கி தற்கால இலக்கியம் வரை இதன் பதிவைக் காணலாம். பழமொழி நானூறும் இதனைப் பதிவு செய்யத் தவறவில்லை.

> புறஞ்செய்யச் செல்வம் பெருகும் அறஞ்செய்ய
> அல்லவை நீங்கி விடும்.

இங்கு அறம் என்பது கொடை கொடுத்தலைக் குறிக்கிறது. அறம் செய்ய அல்லவை நீங்கி விடும். தருமம் செய்வதனால் நாம் செய்த பழைய பாவங்கள் நீங்கிவிடும் என்கிறது பழமொழி.

> அடுத்தேறல் ஐம்பாலாய் யாவர்க்கே யாயினும்
> கொடுத்தேழை யாயினார் இல்.

நம்மிடம் பொருள் இருப்பதே பிறருக்குக் கொடுப்பதற்காகத்தான். கொடுப்பதனால் எவரும் ஏழையாவது இல்லை. எனக் கொடையின் இன்றியமையாமை உணர்த்தப் பெறுகிறது.

### இன்சொல்

இன்சொல் பேசுவது எவ்விதத் துன்பமும் தராது. புன்சொல் துன்பம் தரும். எனவே எப்போதும் யாரிடத்தும் இன்சொல்லே பேசவேண்டும் என்கிறது பழமொழி.

> புன்சொல் இடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை
> இன்சொல் இடர்ப்படுப்ப தில்.

ஒருவருக்கு உடுக்க உடை, நோய்க்கு மருந்து, இருக்க இடம், உண்ண உணவு என எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு அவரோடு இன்சொல் பேசாதது, எருமையைக் கொன்று விருந்து வைப்பவன் மசாலைப் பொருளுக்குக் கஞ்சத்தனம் செய்வது போன்றது.

உடுக்கை மருந்து உறையுள் உண்டியோடு இன்ன
கொடுத்துக் குறைதீர்த்தல் ஆற்றி-விடுத்தின்சொல்
ஈயாமை என்ப எருமை எறிந்தொருவர்
காயக்கு லோபிக்கும் ஆறு.

மேற் சொல்லப் பெற்றவை அனைத்தும் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை அவற்றினும் இன்சொல்லே மிகவும் இன்றியமையாதது என இன்சொல் பேசுவதன் தேவை உணர்த்தப் பெறுகின்றது.

ஊரோடு ஒத்து வாழ்தல்

எவ்விடத்திலும் சான்றோர் சொன்ன அறிவுரைகளை மனங்கொண்டு செய்யத் தக்கனவற்றை மட்டுமே செய்தல் வேண்டும். ஆனாலும் மக்கள் விரும்புவாரெனின் மக்களுக்காக அவர்கள் விரும்புவதைச் செய்யலாம்.

சனங்கள் உவப்பன செய்யாவும் செய்க
இனங்கழு வேற்றினார் இல்.

தான் ஆராய்ந்து அறிந்து கண்ட நுட்பத்தைப் பலகாலும் சிந்தித்து நடக்க வேண்டும். அதே நேரம் ஊரினர் நடக்கும் பாதையில் அது சரியா இது முறையா என எதுவும் கேளாமல் பின் தொடர வேண்டும்.

நாடுக தான்கண்ட நுட்பத்தைக் கேளாதே
ஓடுக ஊரோடு மாறு.

ஊரோடு ஒத்து வாழ வேண்டும் என்ற உண்மை உரைக்கப் பெற்றுள்ளது.

**புறங்கூறாமை**

ஒருவரோடு சேர்ந்திருந்து அவரால் நிறைந்த பயன் பெற்று பின் அவரைப் பற்றிப் புறங்கூறித்திரிவது உண்டவிட்டிற்குத் தீயிடுவது போன்றது.

விண்டவரோ டோன்றிப் புறனுரைப்பின் அஃதாலவ்
உண்டவில் தீயிடு மாறு.

பிறரைப் பற்றிப் பொல்லாங்கு பேசிவிட்டு மறைந்து திரியும் பேதைகள் தம் சொல்லாலேயே தமக்குத் துன்பம் விளைவித்துக் கொள்வர்.

மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயால் கெடும்.

புறங்கூறுதல் இழிவான செயல் மட்டுமின்றி தமக்கே துன்பம் தருவது என்று பழமொழி கூறுகிறது.

### பெரியோரின் பெருமை

அறிவாலும் ஆற்றலாலும் செல்வத்தாலும் உயர்ந்தவர்களை பழித்தல் தகாதது. பெரியோர் என்றும் போற்றுதலுக்குரியோர் என்பதைப் பழமொழி தெளிவாக விளக்குகிறது. நெடுங்காலம் தன்னோடு நெருங்கியிருந்தவர் தீய செயல்களில் ஈடுபடுவதைப் பெரியோர் கண்டால் உள்ளம் நடுக்குற்றுப் பெரிதும் வருந்துவர். அவ்வாறு பெரியோர் வருந்தினால் தீயன செய்தாரது குடும்பம் அழிந்துவிடும் என்று பழமொழி கூறுகிறது.

நெடுங்காலம் வந்தார் நெறியின்மை கண்டு
நடுங்கிப் பெரிதும் நலிவார் பெரியார்
அடும்பார் அணிகானற் சேர்ப்ப கெடுமே
கொடும்பாடு உடையான் குடி.

சிறியவர்கள் பெரியவர்களின் தகுதியை அறியாமல் செருக்கினால் தங்களுக்கு நிகராகக் கொண்டு தகாத சொற்கள் பேசுவது திங்களை நாய் குரைத்து நிற்பது போன்றது.

தங்கள் நேர்வைத்துத் தகவல்லது கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று.

எனப் பெரியோரை மதித்து நடத்தலின் இன்றியமையாமை பழமொழியில் பதிவு செய்யப் பெற்றுள்ளது. மேலும் வாழ்க்கையின் பல்வேறு ஒழுகலாறுகளைப் பழமொழி நானூறு தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.

### நிறைவுரை

மனித வாழ்வியலின் அனுபவத்திலிருந்து முகிழ்ந்தவைதான் பழமொழிகள். பண்பாட்டின் உச்சமான ஒழுகலாறுகளை அடுத்தத் தலைமுறையினருக்குக் கடத்தக்கூடியவை. பண்பாட்டில் பழமொழிகள் இருக்கின்றன. பழமொழியில் பண்பாடு தெரிகிறது. பழமொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையே இடைவெளி இல்லாத ஒன்று கலந்த தன்மை உள்ளது. அதனாலே தான் ஒவ்வொரு பழமொழியும் பண்பாட்டோடு இயைந்து, இசைந்து, இனிது, ஒசிந்து நடக்கிறது. ஒரு பண்பாட்டின் வடிகாலை ஆக்கும் கூறுக்கான அடித்தளம் பழமொழிகளில் அமைந்துள்ளது. இதை எண்ணுங்கால் பன்நெடுங்காலமாகவே மனிதப் பண்பாட்டு விழுமியங்களின் மாத்ததிரைகளாகவே பழமொழிகள் செயல்பட்டு வருகின்றன. மனித இனத்தை நேர்படுத்தி நெறிப்படுத்தும் விழுமியங்களைப் பழமொழிகள் உள்ளடக்கியிருப்பதால் அவற்றை விழுமியங்களை அடக்கி வைத்திருக்கும் விதைகள் எனலாம்.

### துணைநூற்பட்டியல்


கலாநிதி திருமதி அனுஷ்யா சத்தியசீலன், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை – 2016, ப.07.
சந்திரகாந்தன், க. பழமொழிகள் காட்டும் பண்பாட்டுக் கூறுகள், ப.13.
பொன்னுசாமி, மு. பழமொழியும் பண்பாடும், ப. 63.
விஜயலட்சுமி, வா.செ. குழந்தைசாமி, "கிராமத்துதுப் பழமொழிகள்," என்னும் நூலின் அணிந்துரையில், ப.03.